கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆவணத் திரைப்படப் போட்டி.

இப்போட்டியானது வயது வேறுபாடின்றித் தனிநபராகவோ அல்லது குழுவாகவோ எவரும் பங்குபற்றக்கூடிய ஒரு திறந்த போட்டியாகும்.

1.அடிப்படைத் தகுதிகள் மற்றும் தொழில்நுட்ப விதிகள்

- **பங்கேற்பு**: வயது வரம்பின்றி தனிநபராகவோ அல்லது குழுவாகவோ எவரும் பங்கேற்கலாம்.
- **தலைப்பு**: திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட தேவாலயங்களின் பட்டியலில் இருந்து ஒரு தேவாலயம் பற்றிய ஆவணத் திரைப்படமாக இது இருக்க வேண்டும்.
- **கால அளவு**: 15 முதல் 20 நிமிடங்களுக்குள்.
- **மொழி**: சிங்களம் அல்லது தமிழ் (ஆனால் ஆங்கில துணைத்தலைப்புகள்/Subtitles கட்டாயமாகும்).
- **கோப்பு வடிவம் (Format):** MP4 கோப்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- **சிறப்புத் தொழில்நுட்பம்**: பழமையான காட்சிகளை மறுசீரமைக்க/காண்பிக்க அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் மட்டுமே AI (செயற்கை நுண்ணறிவு) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம்.
- **பெயர்ப்பட்டியல் (Credits):** திரைப்படத்தின் இறுதியில் பங்களித்தவர்களின் பெயர்ப்பட்டியல் சேர்க்கப்பட வேண்டும்.
- **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**: விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2026.09.04 ஆகும். விண்ணப்பங்களை இயக்குனர், கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம், 180, 3ஆம் மாடி, கொழும்பு 10 எனும் முகவரிக்கு அல்லது minchris@sltnet.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

2. ஆவணப்படத்தின் உள்ளடக்கம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதி

- **உள்ளடக்கப்பட வேண்டியவை**: தேவாலயத்தின் வரலாறு, பின்னணி, பாரம்பரிய கதைகள், சிறப்புச் சிலைகள் இருந்தால் அவற்றின் சிறப்பம்சம், புதுமைகள், தேவாலயத்திற்குரிய பழக்கவழக்கங்கள், உப-கலாச்சாரம், திருவிழாக்கள் மற்றும் சிறப்பு நவநாட்கள் போன்ற தகவல்கள் சேர்க்கப்பட வேண்டும்.

- **கட்டாய அனுமதி**:
    1. ஆவணப்படத்தின் **திரைக்கதை** (**Script)** மற்றும் **இறுதி உருவாக்கம்** ஆகியவை உரிய பங்குத்தந்தையின் (Parish Priest) மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.
    2. அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் துல்லியமானவை என உறுதிப்படுத்தி அவரால் வழங்கப்படும் **அதிகாரப்பூர்வ சான்றிதழ் கடிதம்** ஆவணப்படத்துடன் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவது கட்டாயமாகும்.

3.பங்கேற்கும் முறை மற்றும் நிபந்தனைகள்

- **இயக்கம்**: ஒரு இயக்குநரால் **ஒரு** ஆவணப்படத்தை மட்டுமே இயக்க முடியும்.
- **ஏனைய கலைஞர்கள்**: இயக்கம் தவிர ஏனைய பணிகளுக்கு ஒரு கலைஞர் ஒன்றுக்கு மேற்பட்ட ஆவணப்படங்களில் பங்கேற்கலாம்.
- **தேவாலய எல்லை**: ஒரு தேவாலயம் தொடர்பாக **ஒரு ஆவணப்படம்** மட்டுமே உருவாக்கப்பட முடியும்.
- **முன்னனுமதி** (**Department Confirmation): விண்ணப்பத்தை திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு முன்னர், தான் திரைப்படம் எடுக்க உத்தேசித்துள்ள தேவாலயம் குறித்து வேறு நபர்குழுவினரால் ஆவணப்படம் தயாரிக்க / என்பதை விண்ணப்பிக்கப்படவில்லை, திணைக்களத்திற்கு 0112665584 எனும் இலக்கத்தின் ஊடாக தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு விடயத்திற்குப் பொறுப்பான அதிகாரியிடம் (திருமதி. ஹசினி) இந்த உறுதிப்படுத்தல உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் . (இந்த உறுதிப்படுத்தலை கடிதம்/ வட்ஸ்அப் /பெக்ஸ்/ மின்னஞ்சல் ஆகிய ஒரு ஊடகத்தின் வழியாகப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.**

4. பாராட்டுகள் மற்றும் பரிசுகள்

- **பரிசுகள்**: சிறந்த படைப்புகளுக்கு பணப்பரிசுகள், வெற்றிக்கிண்ணங்கள் (Trophies) மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- **காட்சிப்படுத்தல்**: உயர் தரத்திலுள்ள ஆவணப்படங்கள் திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ YouTube தளத்தில் காட்சிப்படுத்தப்படும்.

5. இலவச சிறப்புப் பயிலரங்கு: போட்டிக்கு விண்ணப்பிக்கும் உங்களுக்காக ஆவணத் தரைப்படத் தயாரிப்பு குறித்த பெறுமதிமிக்க பயிலரங்கு ஒன்றை நடத்த திணைக்களம் எதிர்பார்க்கிறது. (கிடைக்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பயிலரங்கு நடைபெறும் இடங்கள் மற்றும் மாவட்டங்கள் தீர்மானிக்கப்படும்).